RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s147

OPEN ACCESS

# பெண் மொழியில் 'உடைபடும் மௌனங்கள்' - சிறுகதைத் தொகுப்பு

**மீ. சுதா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம், காந்திகிராமம், திண்டுக்கல்-624302, தமிழ்நாடு, இந்தியா.

# Female Language in 'Udaipadum Mounakkal' - Short Story Collection

**M. Sudha** [a, *]

[a] Department of Tamil, Gandhigram Rural Deemed to be University, Gandhigram, Dindigul–624302, Tamil Nadu, India

* Corresponding Author: sudhavenkatesh15@gmail.com

Received: 26-12-2021
Revised: 13-08-2022
Accepted: 30-08-2022
Published: 28-11-2022

Check for updates

## ABSTRACT

Literature does not encourage gender inequalities. Inequalities among the poets generally decide the language of the literature. Generally, women are considered to be different types of the concept of men. These types of irrational thoughts still exist. Still men feel that it is inappropriate to talk about women's issues. If a woman declares her thoughts and feelings by herself, it's called as feminine. Men cannot withstand some of the pains which can be endured only by women. These pains should be revealed by woman in the writing form. Feminism can be classified into three types namely, 1) write against men, 2) woman should reveal her pain through the writing skills of men, and 3) to establish an own writing method with heart. Of all the three types, only third type can be effectively used by woman to ascertain her needs. There are only four literatures have taken for this article. The main objective of this article is to reveal the men's ideology about portraying women only on the basis of colour, shape and not to think beyond these two.

**Keywords:** Femininity, Aesthetics, Female Body, Defeat

## முன்னுரை

இலக்கியத்தில் பால் பேதம் இல்லை படைப்பாளர்கள் இடையே உள்ள பால் பேதமே படைப்பிலக்கிய மொழியை தீர்மானிக்கின்றது. பெண் என்பவள் ஆணின் கருத்தாக்கங்களின் வழி வார்த்து எடுக்கப்பட்டுள்ள உயிருள்ள பதுமை ஆவாள். அவளது சிந்தனையும் செயலும் இக்கருத்தாக்கத்தின் தொலைவிலேயே இன்றுவரை சுழன்று வருகின்றது. இவளது வலிகளை ஆண் கூறுதல் என்பது மேலெழுந்தவாரியாக மட்டுமே இருக்கின்றது பெண் தனது உணர்வுகளை தனது சுயத்தின் வழியாக வெளிப்படுத்துவது பெண்மொழி எனப்படும்.

பெண்ணுக்கான சில வலிகளை ஆணால் அனுபவிக்க முடியாது. அவ்வலியை எழுத்து வடிவம் தருவதற்குப் பெண்ணால் மட்டுமே முடியும் பெண் மொழியை மூன்றாகவகைப்படுத்தலாம். 1. ஒன்று ஆணை எதிர்த்து எழுதுதல். 2. தனது வலியை ஆண் மொழியில் எழுதுதல் 3. தனது உடலையும் உள்ளத்தையும் தனக்கான சுயத்தோடு எழுதுதல். இதில் மூன்றாவது வகை மட்டுமே பெண்ணின் தேவைகளை அவளுடைய மொழியில் ஆழமாக எழுதுவதற்கான சூழலை தருகின்றது. உடைபடும் மௌனங்கள் என்னும் சிறுகதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளார் சிறுகதைகளில் குறிப்பிட்ட சிறுகதைகள் மட்டுமே இக்கட்டுரைக்கு மூல ஆதாரமாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அவை

பொருதகர், அவளும் நோக்கினாள், கூந்தல், வடிவ அமைதி என்ற 4 சிறுகதைகள் மட்டுமே இக்கட்டுரைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டவை.

ஒரு பெண்ணின் வாழ்க்கை முழுவதும் அவளது உடலை மையப்படுத்தியே கட்டமைக்கப்பட்டுள்ளது. அழகு, வடிவம் என்ற இரண்டை மட்டுமே அவளது மூளைக்குள் புகுத்தி வேறு சிந்தனையின்றி அவளது வெளியை (space) சுருக்கி ஆளும் ஆணின் கருத்தாக்க வன்முறையை கண்டறிவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பெண்மொழி-விளக்கம்

பெண் மொழியானது சங்ககால பெண்பாற் புலவரான ஔவையிடமிருந்தே தொடங்கியுள்ளது. பெண்ணின் உணர்வுகளை மிக ஆழமாகவும் நுட்பமாகவும் எடுத்துரைத்தவர் ஔவை. அவ்வகையில் படைத்தளத்தில் பெண் உடல் மற்றும் உணர்வு பற்றிப் பேசிய முதல் பெண்ணாக அவையை கூறலாம்." பெண் மொழி வலியிலானது மட்டுமல்ல, வலிமையானதும் கூட ஆயிரக்கணக்கான ஆண்டுகள் மௌனித்த அவர்கள் மொழி என்று வீரியத்துடன் விதைக்கப்படுகின்றன" (Prema, 2019).

இப்புதிய மொழிதான் ஆண் ஆதிக்க சமூகம் பெண்ணை அமுக்கி வைப்பதற்கும் மௌனத்தில் உறைய வைப்பதற்கும் தந்திரமாக பயன்படுத்ததிய தந்தைவழி மொழியை தலைகீழாக மாற்றி விடப் போகின்றது. மேலும், "இருண்ட நிலத்திலிருந்து பெண் வெளியேற வேண்டுமானால் அவளுக்கு ஊன்றுகோலாக இருப்பது அவளுடைய மொழியாகத் தான் இருக்க முடியும்" (Jayandi, 2008).

## பெண் உடல்

பெண்உடல் மீது இந்தச் சமூகம் நிறைய வரையறைகளை வைத்திருக்கின்றது. பெண் புழங்கும் வெளியையும், பார்வைகளையும் கனவுகளையும் கட்டுப்படுத்துகின்றது. பெண் தான் அழகு, அவள் ஆணின் ரசனைக்காக படைக்கப்பட்டவள், எளிதில் திருப்தி அடையக் கூடியவள், ஆண்களின் உணர்வுகளுக்கு உணவாக படைக்கப்பட்டவர் என்ற ஆணின் புனைவுகளையும் கேள்விக்குஉட்படுத்தப்பட வேண்டும்.

"தந்தைவழிச் சமூகம் தன் மேல் சுமத்தியுள்ள அடையாளங்களை அழிக்க வேண்டுமென்றால் ஒரு பெண் தனக்கான வகையில் தன்னுடைய கலை இலக்கிய பிரதியில் முழுமையாக தன் உடம்பை செய்து வைக்க வேண்டும் என்கிறார் ஹெலன்" பெண் உடல் அழகாக இருக்கவேண்டும் மென்மையாக இருக்க வேண்டும் இனிமையாக பேசவேண்டும் பணிவாக நடக்க வேண்டும் அன்பு மட்டும் செலுத்த வேண்டும் என்ற ஆதிக்க கருத்தாக்கங்களை கட்டுடைப்பது பெண் எழுத்தாகும் (Jayandi, 2008).

"உன்னையே நீ எழுது உன் உடம்பின் குரலுக்குச் செவி சாய், அப்போதுதான் வகுத்துரைக்க முடியாத உனது நனவிலி மனத்தில் உள்ள மூல வளங்கள் எல்லாம் பொங்கி புறப்பட்டு வெளிவரும்.

இப்படி எந்தவிதமான தணிக்கை உணவிற்கும் செவிசாய்க்காமல் தன் உடம்பின் அதிர்வுகளுக்கு உண்மையானவர்களாக இருந்து பெண் எழுத்தாளர்கள் செயல்படவேண்டும்" என்கிறார் ஹெலன் (Jayandi, 2008).

பெண் உடம்பு மென்மையாக இருக்க ஆக இருக்க வேண்டும் என்ற ஆணாதிக்க புனைவை மறுத்து ஆணாதிக்க கருத்தாக்க வன்முறையால் சதை குவியலாக ஆக்கப் பட்ட அவலத்தை எதிர்க்க வேண்டும் பெண் தன் உடம்பின் சக்தியை அவள் ஒரு ஆணை நினைத்து அடித்துக் கொள்ளாமல் தன் உணர்வுகளுக்கு செவிமடுக்க வேண்டும் என்கிறார் ஹெலன் பெண் உடம்பை பற்றி தனக்குத்தானே இனி புலம்பாமல் தனக்குத் தேவையானவற்றைதானே உருவாக்கிக் கொள்வதற்கு இவ்எழுத்து முறை துணை புரியு வேண்டும்.

## தோற்பாவை

கையும் காலும் தூக்கத் தூக்கும் தோற்பாவை போல பெண்கள் இன்று வரை இருக்கின்றனர். நூலில் ஆடும் பொம்மையாக நினைத்து பொருதகர் என்ற சிறுகதையில் வரும் ராதா கணவனின் அலுவலக விழாக்களில் கலந்து கொள்ளும் போது அணியும்உடைகளைக் குறித்து கணவனிடம் கேட்கிறார் கணவன் கூறும் உடைகளையே அணிந்து கொள்கிறாள்.

“இவருக்கு பதவி உயர உயர என் டிரஸ் அளவு குறைகிறது மாடல் மோகினியாக நான் இவர் கூப்பிட்ட இடத்துக்கு இவர் குறிப்பிட்ட ட்ரெஸ்ஸில் போய் வரேன். நளாயினி மட்டுமா சொன்னபடி நடந்தாள்? சித்தி, அம்மா, அம்பி கூட என்னைப் பார்த்து வெட்கப்படும்படி பேண்ட் பனியன் போட்டு இவரோடு போகத் தொடங்குகிறதுக்கு நான் எத்தனை எத்தனை உணர்ச்சிகளை மிதித்து எனக்குள்ளேயே புதைச்சு இருக்கேன்” (Prema, 2019).

“அவளும் நோக்கினாள்” என்னும் சிறுகதையில் வரும் மைதிலி தனது சுயத்தை இழந்து கணவனது விருப்பப்படி உடை உடுத்துகிறாள். அவளின் விருப்பங்களை அவளை மறந்து போகும் வழி 40 வருட தாம்பத்திய வாழ்க்கையை வாழ்கிறாள்.

“யார் முன்வரலாம். யார் முன்வரக் கூடாது என்பதும் அவர் முடிவே. எல்லாம் கண்கள் காக்கும் கனலில் இருந்து புரிந்து கொள்ள வேண்டும்…அவர் சொல்லும் உடையை, காட்டும் நகையை அணிய வேண்டும்…அவளுக்குப் பிடிக்காத வண்ணங்களில்…பட்டுப் புடவைகள், தங்க வைர நகைகள் அவளின் ரசனை அவளுக்கு மறந்து போனது” (Prema, 2019).

இவ்விரு சிறுகதைகளிலும் வரும் கதாபாத்திரங்கள் இருவரும் உடை சார்ந்த பிரச்சனைக்கு முதன்மை தருபவர்களாக இருக்கின்றனர். தங்களது அறிவு சார்ந்த திறமைக்கு மதிப்பு அளிக்கப்படாததைக் குறித்த வருத்தத்தை காட்டிலும் உடை, நகை சார்ந்த விஷயங்களுக்கு விருப்பம் மறுக்ககப்பட்டவையே முதன்மையாக கருதுவதை அறியமுடிகின்றது.

## அழகுப்பதுமை

அழகு என்ற சொல் முருகனைக் குறிக்கும் என்பர் பக்தியாளர்கள். ஆனால் நடப்பியலில்அழகு என்பது பெண்ணை மட்டுமே குறிக்கிறது. இச்சமூகம், பாதம் ஆதி கேசம் முதல் கேசமாதி பாதம் வரை பெண் என்றும் அழகுடையவள் ஆகவே இருக்க வேண்டும் என்றசிந்தனையை பெண்ணிற்கு சிறு வயது முதல் மனதில் பதிய வைத்து வருகிறது.

‘கூந்தல் சிறுகதையில் சுதாவின் பாட்டி கைம் பெண்ணாக இருப்பதால் இதன் தலையில் சிறிது முடி வளர்ந்த உடன் அதனை மழித்துக் கொள்கிறாள். மேலும் தனது பேத்தி சுதாவின் முடி வளர்ச்சிக்கு தனி கவனம் செலுத்துகிறார். சுதாவும் தனது கூந்தலின் அடர்த்தியை விளையாடும் பொழுதும் வேலை செய்யும் பொழுதும் முன்வந்து வேண்டும் கூந்தலால் சிரமத்திற்கு உள்ளாகிறாள். அவளது கூந்தலை கண்டு பிறர் பொறாமைப்படும் போதும் பாராட்டும் போதும் அவளுக்கு தனது கூந்தலின் மீது சலிப்பும் வெறுப்பும் ஏற்படுகிறது.

“மானிட பெண்களின் துன்பம், இதோ பின் மண்டையில் இருக்கும் ஒற்றை முடியைப்போல…அலங்காரத்தால் மூடப்பட்டிருக்கும் கண்ணுக்குப் புலப்படாது. எடுத்துச் சொல்லி புரியாது. களைய முடியாத, தொடர்ச்சியான சின்ன வலி… பெண்களுக்கு மட்டும் நீளமான தலை மயிர் என்று விதிக்கப்பட்டது இதை உணர்த்தத்தானோ…? (Prema, 2019).

பெண்ணிற்கு அழகு சிகை என்று கூறி அவற்றைப் பேணிப் பாதுகாப்பது அவளது வாழ்வியல் கடமையாக மாற்றிய ஆணாதிக்க போக்கை மறைமுகமாக படைப்பாளர் இங்கு சுட்டியுள்ளார். மேலும், திருமணத்திற்கு பெண் பார்க்கும்போது தொடரும் கூந்தலில் முக்கியத்துவம் ஆணின் இறப்பின் போது கூந்தலை களைவதுடன் நிறைவு பெறுகிறது. மனித உடலில் இறந்த பிறகு வளரக்கூடிய தன்மை பெற்றது கூந்தல். அக் கூந்தலைக் கூட வைத்துக் கொள்வதா அல்லது கலைந்து கொள்வதா என்ற முடிவை ஆண் சமூகம் தனது கட்டுப்பாட்டு வைத்துள்ளதைப் புலப்படுத்துகிறார் படைப்பாளர்.

'வடிவ அமைதி' என்னும் சிறுகதையில் அழகு என்பது பதின்ம வயது பெண்களை ஆட்டிப்படைத்து அவர்கள் அதை வேறு எதையும் சிந்திக்க விடாமல் சிதைக்கிறது என்பதை இக்கதையில் வழிச்சுட்டிக்காட்டுகிறார் படைப்பாளர். இக்கதையில் வரும் மஞ்சு தனது தாயைப் போல நல்ல உடற்கட்டுடன் இல்லாமல் இருக்கிறாள். இதனால் தன்னைத்தானே பார்க்க சகிக்காமல் நிறுத்திக் கொள்கிறாள் தாயுடன் விளையாடுவதை தவிர்க்கிறாள். மஞ்சுவிடம் அவளது நிலைமை குறித்து ஹாய் வற்புறுத்தி கேட்கும் இடத்தில் தனது அழகற்ற உடலில் காரணம் எனக் கூறி வருந்துகிறாள். தாயின் அழகு அவளை சிந்திக்க விடாமல்துயரத்தைத்தருகின்றது.

"ஒன்றை மட்டும் தெளிவாய் புரிந்து கொள். உன் இலட்சிய உடன் ஒரு மீடியா மாயை. தனித்துவத்தையும் சுதந்திரத்தையும் ஆதரிக்கிறோம் என்கிற விளம்பரத்துடன், உன் சினேகிதிகளில் சிலரைபுலிமியா, அனொரெக்ஸியா நெர்வவோஸா என்று சீக்காளிகளாக்கிக்கொள்ளும் மாயை பல கல்லாப் பெட்டிகளை நிறம்பி வலியச் செய்யும் பெரும் மாயை" (Prema, 2019).

"மாம்! என் உடம்பு அப்படி. உப்பிப் போய். கோரமாய். அழகில்லாமல் பார்க்கச் சகிக்காமல். எனக்கேசகிக்க முடியவில்லையே, மற்றவர்களுக்கு உயிரை விடலாம் போலிருக்கிறது" (Prema, 2019).

'அழகு' என்ற கருத்தாக்கம் ஆணாதிக்கத்தின் வெற்றிகரமான மந்திரக்கோல் மேலும் பெண்களுக்கு வேறு சிந்தனைகளை உருவாக்காமல் பார்த்துக்கொள்ள இம்மந்திர கோல் பயன்படுகிறது என்பதை படைப்பாளர் மிகத் தெளிவாக எடுத்துரைத்துள்ளார்.

## வலி அறிதல்

பெண்ணின் வலி அறிதல் என்பது மிக நுட்பமானது. சமூகம் தொடர்ந்து தரும் வலியின் அளவு போல் நீண்டு கொண்டே செல்கிறது. இதை உணர்த்த அவளும் நோக்கினாள் என்னும் சிறுகதையில் வரும் ராமச்சந்திரன் தனது மனைவியிடம் நடந்து கொண்ட நிலையை தனது மகனும் அவரது மனைவியிடம் தொடர்வதை அறிகிறான்.

"எப்பவும் நமக்கு கீழேயேவந்தவளை இருத்தி வைக்கணும்னு! வச்சா நம்ம லைஃப்சேஃப்ன்னோ இல்ல அதுல கிடைக்கிற அந்த அளிப்ப சந்தோஷமும் தெரியலை வெறியா ஆட்டி வைத்தது நம்மளை. பளிச்சுன்னு சொல்றேனே… அவ விருப்பங்களுக்கு மதிப்பு கொடுக்க ஆரம்பி. அவளை மரியாதையா நடத்து. உண்மையான சந்தோஷம் எதில் இருக்ககுங்கிறத அப்ப புரிஞ்சுப்ப." என்ற வரிகளின் வழி இனியாவது பெண்ணின் வழியை தெரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தை ஆண் பாத்திரம் வழியாக பதிவு செய்துள்ளார் படைப்பாளர் (Jayandi, 2008).

## முடிவுகள்

பெண் மொழியானது அவ்வையின் சங்கப்பாடலில் தொடங்கிவிட்டது. இருப்பினும் சுதந்திர வேட்கையின் பாதிக்கப்பட்டு இருந்தாலும் பெண் தன்னை புரிந்து கொண்டு தனக்கான நோக்கையும் போக்கையும் அறிந்து கொள்ள சில காலம் ஆகி விட்டது என்பது இதன்வழி கண்டறிய முடிகின்றது. இன்றளவும் பெண் மீது வைக்கப்படும் உடைசார்ந்த கருத்தாக்க வன்முறையில் இருந்து பெண் படைப்பாளிகளை வெளிவர முடியாமல் தவிப்பதை பொருதகர், அவளும் நோக்கினாள் என்ற சிறுகதைகளின் வழி அறிய முடிகின்றது. வடிவம் என்னும் அழகியல் கட்டுக்குள் இருந்து வெளிவர விடாமல் சமூக வலைதளங்களும் அழகுசாதன நிறுவனங்களும் தூண்டில் போடுவதையும் இதில் பதின்ம பெண்கள் மாட்டிக்கொண்டு உளவியல் ரீதியாக பாதிக்கப்படுவதையும் வடிவ அமைதி என்னும் சிறுகதையின் வழி உய்த்துணர செய்துள்ளார் படைப்பாளர். பெண்ணை குறிப்பாக மனைவியை அடிமைப்படுத்த நினைக்கும் ஆணின் ஆள் மன ஓட்டத்தை ஆணின் வாய்மொழியாக வெளிப்படுத்திய பாங்கினை அவளும் நோக்கினாள் என்ற சிறுகதையின் வழி கண்டு உணர முடிகின்றது. உடல், அழகு, உடை என்ற வட்டத்துக்குள்ளேயே பெண்ணிய படைப்பாளர்களின் கதைக்கரு மையமிட்டு வருகின்றது பெண்ணின் உடல் மன வலியை கூறிய மொழிநடை எனது சற்றும் வார்த்தையின் வீரியம்

குறையாமல் வாசகர் இடத்து சென்று தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இக்கட்டுரைக்கு எடுத்துக்கொண்ட கதைகளின் வழி இன்றும் பெண்ணின் உலகம் வீடு அழகு உடை என்று சுற்றி வருவதை அறிய முடிகின்றது மேலும் பெண் படைப்பாளர்களும் கட்டுக்குள் இருந்து வெளிவர முடியாமலும் தனக்கான புதிய உலகை அல்லது போக்கை உருவாக்கிக்கொள்ள இயலாமலும் ஆணின் கருத்தாக்க வன்முறையிலிருந்து விடுபட முடியாமல் தவிப்பதையும் கண்டறிய முடிகின்றது.

## References


Jayandi, M. (2008) Pen Ezhuttu, Kaviya Publication, Chennai, India.

Prema, R. (2019) Udaipadum Mounagkal, Bharathi Puththakalayam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License